# திராவிடநாடு



*வரலாற்றுக் கற்பனை*

# கிரேக்கத்துக் காவலன்

[ அ. மாரியப்பன் ]

[ அன்றொருநாள்..........எந்த நாட்டினையும் சொந்தநாடாக்கிக் கொள்ள இந்தியாவின் மீது படையெடுத்த அலெக்சாந்தனுக்கு ஆதரவு தந்து, இந்திய ஒற்றுமையை அம்பி என்னும் அரக்கன் குலைத்த நாள்......... நெஞ்சிலே வீரங்கொண்டு அஞ்சாமல் வெஞ்சமர்புரிந்து பஞ்சைகளாய் தந்திரமாகப் பிடிபட்ட புருஷோத்தமன் மலைகுலைந்தாலும் நிலை குலையாமல் சிலைபோல நின்ற நாள்........அணி தந்து, ஆள் தந்து, பணிபல புரிந்த பத்தாம் பசலியுடன் கிரேக்கத்துக் கொற்றவன் அரியணையில் அமர்ந்திருக்கும் நாள்...நிகழ்ந்த நிகழ்ச்சியினை நிழல்போலக் காட்டுவதே இச்சிறு நாடகம்.]

அலெக்சாந்தன்:- புலிபோல வீரமுள்ளவன் எனப்பிதற்றிவிட்டு, இப்போது கிலியடித்து நிற்கும் புல்லன் புருஷோத்தமனே!

புருஷோத்தமன்:- அருமையான எங்கள் நாட்டை, ஆகாயமளாவிய புகழ்பெற்ற எம் நன்னாட்டைப் படை பலத்தால் வெல்ல இயலாது, தடை கடக்கத் தயங்கி நின்று, சூழ்ச்சியால் எமை வென்ற சூதுமதியினரின் தலைவன் அலக்சாந்தனே!

அலக்:- அழகாகச் சொல்லிவிட்டாய் நீ, அற்பன் நானென்னும் முறையில்! ஆண்டிக் கோலத்தில் அணுகி உன் அரசைக் கவர்ந்து கொண்டேனா, அல்லது இனிமையாகப் பேசி இளித்த வாயர்கள்போல இன்னல் இழைத்தே[illegible]? மக்கள் மாக்களாக இருந்தும் மன்னன் அதைக் களையப் பாடுபடாமல் மதிகெட்டுத் திரிந்தது ஏன்?

புரு:- மதிகெட்ட மன்னன், அரசுரிமைக்கு அருகதையற்றவன், தான்தோன்றித் தனமாகப் பேசும் தன்னலவாதி, தாய்நாடு பறிபோவதைக் கண்டும் வாளாவிருந்த வஞ்சகன், மன்னர் வேடத்தில் மக்களை மாக்களாகத் தூண்டிய மதிகெட்டவன், சந்தர்ப்பம்போல் பேசிச் சதி செய்யும் சதிகாரக் கும்பலின் தலைவன், நாடு நலிவடைந்திருக்குங்கால் நஞ்சை அருந்துங்கள் எனத் துர்ப்புத்தி கூறிய துரோகி, தானமட்டும் அறுசுவை யுண்டி அருந்தி அனாதைகளைக் கவனியாத கபோதி, ஒற்றுமையுள்ள மறக்குலத்தில் பிறந்து மனிதப் பண்பை இழந்த மடையன், நாட்டில் பஞ்சம் தலைகாட்டும்போது, நெஞ்சிலே கொஞ்சமும் இரக்கமின்றி வரி வசூலித்த வஞ்சகன், நானல்ல நாடாளும் வேந்தே! இதோ தங்கள் முன் கைகட்டி, வாய் பொத்தித் தலைவணங்கி நிற்கிறானே தட்சசீலத்துத் தலைவன் அம்பி—அவன்!

அலக்:- நிறுத்து உன் பிரசங்கத்தை!

புரு:- சாக்கடையிலே கிடப்பவனுக்குச் சந்தன மணம் எங்கே தெரியப்போகிறது. என் உள்ளக் குமுறலை ஓர் உன்மத்தனிடம் கூறியது எனக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது! நாட்டில் கண்ணாரக் கண்டவற்றைக் கூறினால், அதை நம்ப மறுத்தால், மற்றவர் செவிகளுக்கு அது பிரசங்கம் மாதிரிக் கேட்கிறது போலும்!

அலக்:- பேச மாத்திரம் கற்றுக் கொண்டீரே நன்றாக! முதலில் கூறிய அத்தனை அம்சங்களும் உனக்கும் பொருத்தமாகத் தானே இருக்கிறது! அதன்படி பார்த்தால் நீ துரோகி? இல்லையா?

புரு:-துரோகி! நான் துரோகியா? அன்புள்ள அரசன் — காவியம் பாடி ஓவியம் போற்றும் கவிஞரை ஆதரிக்கும் வேந்தன்— மதிப்புக்காக வல்லாது மமதையைத் தீர்க்கும் மன்னன்-உத்தமன் சத்தியவான் — சற்குணவான் என்றெல்லாம் புகழ் பெற்ற இப்புருஷோத்தமனா துரோகி? ஏன் கூறமாட்டீர்கள்? வந்தவரை 'வா'வென வரவேற்று வற்றாத செல்வத்தை வாரி வழங்கிய இப்பாரத நாட்டின் உணவல்லவா உம்மை இப்படிப் பண்பிழந்து பேசச் செய்கிறது?

அலக்:- பாரத நாட்டின் பண்பை மறந்த பரத்தையர்பட்டியலிலே என்னையும் சேர்த்துவிட்டீரே! உண்ட வீட்டிற்கு இரண்டகம் நினைக்கும் சண்டாளர்கள் கூட்டத்தில் நான் இன்னும் பங்கு பெற வில்லை! ஆயினும், எதிர்த்துப் பேசும் எத்தர்களை—வீராப்புப் பேசும் வீணர்களை நான் என்றும் உயிரோடு விட்டதில்லை! விடப்போவதுமில்லை!

புரு:- அதுபோன்று என்னையும் உயிரோடு வாழவிடமாட்டீர்! ஏன் அப்படித்தானே? மிகவும் நன்று. தாய் நாட்டைத்திறமையற்றோர் திருடும்போது,

"திருடனே! நில். இந்திய நாட்டு இளஞ்சிங்கம் இணையற்றோர்க்கும் அஞ்சாது. வில்லுக்கு வில்—வாளுக்கு வாள் — வீச்சிற்கு வீச்சு — வீரத்திற்கு வீரம்" எனக் கூறி வீரமுழக்கம் செய்த எனக்கு இதுவும் வேண்டும்! இன்னமும் வேண்டும்!

அம்பி:- ஆமாம்! வேண்டும்! வேண்டும், வேந்தர் வேந்தே! விண்ணோக்கி வீரவுரை கூறும் இவ்வீரரை வீழ்த்திவிட வேண்டும்!

புரு:- இரவு பகல் சலியாது உழைத்த உத்தமர்களைக் கொல்லக் கடவுளாலும் முடியாது!

அம்பி:- கடவுளாலும் முடியாததைக் கற்றோர் முடிப்பர். அதை அறியாயோ நீ?

புரு:- அறிவேன். ஆனால் தாங்கள் முழுதும் கற்றுணர்ந்த முனிவரல்லவே! முப்பத்து முக்கோடி தேவர்களையும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளையும், நவக்கிரகங்களையும் உருவாக்கிய உலுத்தனுமல்லவே சதியால் என்னைக் கொல்ல! ஆயிரம் பொய் சொல்லி ஓர் திருமணம் நடத்தும் அழியாப் புல்லுருவிக் கூட்டத்தில் பங்கு பெற்ற உன்னால் முடியாது என்னைக் கொல்ல!

அம்பி:- பின் யாரால் முடியும்?

புரு:- எனக்கு ஏற்படக்கூடிய இறப்பு எவரால் என இன்னும் வரையறுக்கப்படவில்லை; வரையறுக்கப்பட வேண்டிய அவசியமுமில்லை!

அம்பி:- வரையறுக்காவிடில் நீ நிர்ணயம் செய்துகொள்!

புரு:- எதற்காக நிர்ணயம் செய்துகொள்வது? போரில் சரியான படி அறப்போர் நடத்தி என்னை வென்றிருந்தால் நான் உனது அடிமை. நான்தான் அறப்போரில் ஆண்மையை இழக்கவில்லையே!

அலக்:- அறப்போர் நடத்தும் அப்பழக்கம் எங்கள் கிரேக்க நாட்டில் இடையாது. இரு திறத்தினரில் ஒருவர் எப்படியாவது வெற்றிபெற்றே ஆக வேண்டும். ஆனால் நாங்கள் என்றும் உண்மைக்குக் கட்டுப்பட்டவர்கள். அதுதான் வீரம்!

புரு:- அதிசயமான வீரமாக இருக்கிறது கிரேக்கத்துக் காவலரே! வீரமாம் வீரம்! அது தங்களுக்குப் பொருந்தாது.

அம்பி:- அப்படியென்றால், வீரம் உனக்கு ஒருவனுக்குத்தான் தனியுரிமையோ?

புரு:- தனியுரிமை கொண்டாடும் தரமற்றவனல்ல நான். தரணியில் பிறந்தோரனைவரும் அரியணை ஏற முடியுமா? சிலரால் தான் முடியும். அதேபோல வீரம் சிலருக்கு மட்டுமே உரியது.

அலக்:- சிலருக்கு என்றால் அதில் எங்களுக்கும் பங்கு உண்டெனக் கடந்த போரில் நிரூபித்தோமே அது போதாதா?

புரு:- போலி வேடத்தில் வந்து, புறமுதுகு காட்டுகிறவர்கள் எமைத் தாக்க அது சந்தர்ப்ப வசத்தால் வீரமெனப்படுகிறது தங்களால்!

அலெக்:- எம்வீரரின் வலிமையை நீ உணராய் போலும்! இவர்களைக் கொண்டுதானே பல நாடுகளை வென்றோம்.

புரு:- கரு இருளில் கனவான்களைப்போல வந்து கொலை புரிந்த கயவர்களுக்குப் பெயர் வீரர்! நள்ளிரவில் நரிகள்போல் வந்து நன்மையாளரை நமனுலகத்திற்கனுப்பிய நயவஞ்சகர்களுக்குப் பெயர் நல்வீரர்! நாகமும் உறங்கும் நடு நிசியில், நல்லவர்போல் நடித்துப் பொல்லாத் தனம் புரிந்த கோழைகளுக்குப் பெயர் வீரர்! மையிருளில் மாசற்றோர் எனக் கூறிப் பாசமிகு தேச வீரர்களை ஏசவைத்துச் சென்ற எத்தர்களுக்குப் பெயர் வீரர்!

அலெக்:- என்ன? (ஐயத்துடன்) நடு இரவில் வந்தனரா? (அம்பியை நோக்கிக் கோபமாக) அம்பி! இதெல்லாம் என்ன?

அம்பி:- ஒன்றுமில்லை மன்னர் மன்னவா! மாற்றாரைப் பார்த்து மதங்கொண்ட யானை பிளிறுவதைப்போல் அவையோரைப் பார்த்ததும் அசந்துவிட்டான் போலிருக்கிறது!

புரு:- அம்பி! சித்தப்பிரமை ஏற்பட்டது எனக்கல்ல; உனக்குத்தான் மதி கலங்கியிருக்கிறது.

அம்பி:- நிறுத்து உன் பேச்சை நீசனே! உன் வேதாந்தம் இங்கு தேவையில்லை.

அலெக்:- அம்பி! நீ புருஷோத்தமனைக் குறுக்குக் கேள்வி கேட்காதே; புருஷோத்தமா! பதறாதே. உண்மையை மறையாமல் உரை. உள்ளதையறிந்து ஆவன செய்வோம்.

புரு:- நாங்கள் பிடிபட்ட அன்றிரவு மழை பொழிந்தது தங்களுக்கு நினைவிருக்கிறதா?

அலெக்:- (சற்று சிந்தனைக்குப் பின்) இல்லையே!

புரு:- மதுவையும் மாதுவையும் சுவைத்துக் கொண்டிருந்த உமக்கெப்படி அது நினைவிருக்கும். சரி, சரி! கூறுகிறேன் கேளுங்கள். அன்றிரவு பலத்த மழை பெய்தது. சீலம் நதியில் வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. அப்போது உமது வீரர்கள் எங்கிருந்தனரென்பதை யாவது நினைப்படுத்திச் சொல்கிறீர்களா?

அலெக்:- எனது கடற்படையனைத்தையும் படகிலிருக்கச் சொன்னேன் என நினைக்கிறேன்.

புரு:- அந்த இடத்தில்தான் அம்பியின் மூளை அதிதீவிரமாய் வேலை செய்திருக்கிறது. அம்பி உமது வீரருக்கு ஆசையை ஊட்டியிருக்கிறான். அவர்களும் தான் ஆடத் தன் சதை ஆடும் என்பதுபோல பணத்தின் வலையில் வீழ்ந்தனர். பண ஆசை எவரைவிட்டது. படகுடன் வந்து பாழ்படுத்தினர் எமது நன்னகரை!

அலெக்:- இப்போது எல்லாம் தெளிவாகப் புரிந்துவிட்டது.

### எது அதிர்ஷ்டம்?

"நான் அதிர்ஷ்டத்தில் நம்பிக்கை வைத்திருப்பவன், நான் எவ்வளவு அதிகமாகக் கஷ்டப்பட்டு உழைக்கிறேனோ அவ்வளவு அதிகமாக அதிர்ஷ்டமும் என்னை வந்து சேருவதாகக் கண்டுபிடித்திருக்கிறேன்."

—ஸ்டீபன் லீகாக்.

அம்பி என்னையும் சாய்க்கச் சதித் திட்டம் உருவாக்கிவிட்டானு? எல்லாம் விதியின் விளையாடல்.

புரு:- விதியல்ல அன்பரே! அறிவற்ருேர் கூறும் பயனற்ற தத்துவங்களுக்குப் பெயர் விதி. அதை வெல்ல மதியை உபயோகிக்கவேண்டும். அப்படி உபயோகிக்கும்போதுதான் சிறிது தவறிவிட்டார் அன்பர் அம்பி அவர்கள்!

அலெக்:- எது எப்படியிருப்பினும் என்ன? வீரர்களே! புருஷோத்தமனின் கைவிலங்கை அகற்றுங்கள். அதைத் தீயோன் அம்பியின் கையிலிடுங்கள்.

புரு:- (வீரர்கள் கைவிலங்கை அகற்றியதும்) ஆகாது நண்பரே! பிழை செய்தாரையும் பொறுக்கும் மரபு எங்களுடையது. அம்பி வேண்டுமென்றே இதைச் செய்யவில்லை.

அலெக்:- புருஷோத்தமா! நீதான் உண்மையான வீரன். நன்றி கொன்றவர்க்கும் நன்மையையே புரியும் உன் நற்குணம் வளர்க! பாரத நாட்டின் பெருமையைப் பறைசாற்றவே நீ பிறந்திருக்கிருய். நீ உள்ளமட்டும் உன் நாட்டில் நலிவு இருக்காது. பொலன் நிறை நாடாக உன் நாட்டினை ஆக்குவாயாக! இன்றுமுதல் நாமிருவரும் நண்பர்கள். உன் நாட்டிற்கும் என் நாட்டிற்கும் இடையில் வியாபாரமும் வர்த்தகமும் பெருகட்டும்! கிரேக்கமும் இந்தியாவும் இன்று முதல் இணைந்துவிட்டன. வாழ்க பாரதநாடு!

அம்பி:- புருஷோத்தமா! அலெக்சாந்தரே! என்னை இருவரும் மன்னித்துவிடுங்கள். ஏதோ கெட்டமதி என்னை இப்படியெல்லாம் ஆட்டிப்படைக்கிறது. இன்றுமுதல் நான் அறிவு பெற்றவனுகிவிட்டேன். இனி நான் என் வாழ்விலேயே தீமையைப்பற்றி எண்ணமாட்டேன். நாட்டின் நலம்நாடும் நல்லறிவாளனுக நான் விளங்குவேன். இது சத்தியம்!

புரு:- அலெக்சாந்தரே! நான் மட்டும் உண்மையை உரைத்திருந்தால் போதுமா? அது முழுவதும் உண்மையென முழு அறிவுடன் நம்பிய உமது திறமையே திறமை! தீத்திறம் புரியும் தீயோர்களின் முடிவை நாம் நிர்ணயிக்கக்கூடாது. எல்லோர்க்கும் ஓர் கடவுள் உண்டு. அதை உணராதவரே மிகவும் கடையராவர்.

அலெக்:- நண்பரே! நான் இனி உம்மை எவ்விதம் நடத்தப் பிரியப்படுகின்றீர்?

புரு:- என்னை மரியாதையுள்ள ஒரு மன்னனுகை, வேல்மிகு தானை பெற்ற நல் வேந்தனுகை, அருந்திறல் அனைத்தையும் ஒருங்கே பெற்ற அரசனுக மதித்து நடத்தவேண்டும்.

அலெக்:- அப்படியே ஆகட்டும். உனது வீரத்திற்கு அறிகுறியாக உனது நாட்டை உனக்கே திருப்பிக்கொடுத்துவிடுகிறேன். இந்த வாளைப் பெற்றுக்கொள். (அலெக்சாந்தர் வாளைக் கொடுக்க அதைப் புருஷோத்தமர் பெற்றுக்கொளகிருர்) இனி உமது நாட்டைத் திறமையுடன் ஆட்சிபுரியும்.

புரு:- தங்கள் விருப்பப்படியே அரசுபுரிந்து இந்தியாவின் பெருமையை நிலைநாட்ட நாங்கள் என்ருன்றும் பாடுபடுவோம்.

அலெக்:- மிக்க மகிழ்ச்சி! நண்பர்களே! என்து வீரர்கள் தாயகம் திரும்ப அவாவினராய் உள்ளனர். நான் அவர்கள் விருப்பப்படி, இன்றே கிரேக்கம் செல்ல உத்தேசித்துள்ளேன், நான் சென்று வருகிறேன். விடை கொடுங்கள்.

புரு:- நன்று! சென்று வாருங்கள். நம் நட்பு குன்றின்மீதிட்ட விளக்கென ஒளிபெறும் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல உணர்த்துகிறேன். சென்று வாருங்கள். வணக்கம்.

அலெக்:- வணக்கம்.

[கைகூப்பிப் பிரிந்து செல்கிருர்].

*




# அங்கே அது! இங்கே?....

மலர் 15] ஆண்டு சந்தா ரூ. 8 [23-6-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 41

"வேறு வழியில்லை...."

"என்ன?"

"ஆமாம்! விலகுவதைத் தவிர வேறு வழியில்லை...."

"நன்றாக யோசியுங்கள்."

"யோசிக்க வேண்டியது, நீங்கள்! நாங்களல்ல!"

"இப்படி நீங்கள் சொல்லுவது நன்றாகயிருக்கிறதா?"

"நீங்கள் செய்வது மட்டும் நன்றாயிருக்கிறதா!"

*

குரலிலே, குமுறல்! வீறு நடை! ஏறெடுத்த பார்வை!—இதைக் கண்டு, டில்லியே, ஆச்சரியமும் அதிர்ச்சியும் அடைந்துள்ளதாம். இதுவரை, பணிந்து செல்வதையே பாக்யமாகக் கருதியோர், எதிர்த்து வாதாடியது மட்டுமல்ல, இதோ, நாங்கள் ராஜினாமாவை வீசியெறியவும் தயாராயிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்கள். இந்திய உபகண்டத்திலே, டில்லியின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டிருக்கும் **அசாம்** பிரதிநிதிகள்தான் இவர்கள்! எதிர்க்கட்சிக்காரர்களல்ல, காங்கிரஸ்காரர்கள். சாதாரணக் காங்கிரஸ்காரர்களோ என்றால், அதுவுமல்ல. அஸ்ஸாமில் காங்கிரசைக் கட்டிக்காப்போர்! அஸ்ஸாம் காங்கிரஸ் கமிட்டித் தலைவர் **பிமல பிரசாத் செலிடா** என்பார், காங்கிரஸ் கமிட்டி மெம்பர்கள் ஐந்து பேருடன் டில்லிக்குச் சென்று தேபரையும் அசாத்தையும் கண்டு தெரிவித்திருக்கிறார்

**எங்களது உரிமையில் இம்மியளவும் விட்டுக் கொடுக்க நாங்கள் தயாராக இல்லை.**

**இந்த விஷயத்தில், ஒவ்வொரு அஸாமியரும் சாத்விகமான வழிகளில் போராடத் தயாராக உள்ளோம்.**

**இந்தப் பிரச்னைக்காக, எங்கள் காங்கிரஸ் மந்திரிசபை, தங்கள் ராஜினாமாவை வீசியெறியவும் தயாராயிருக்கிறது!!**

நேரே சென்று, இதைத் தெரிவித்திருக்கிறார் டில்லி மூவர்களிடம்! தெரிவிப்பவர் மாகாண காங்கிரஸ் தலைவர்—அசாமை ஆளும் **விஷ்ணுராம் மேதி** எனும் முதலமைச்சரோ, "இதோ எமது ராஜினாமா! டில்லி, நாங் கோரிக்கைக்கு இணங்காவிடில் நாங்கள் ராஜினாமா செய்யத் தயார்" என்று அறைகூவல் விடுக்கிறார்!

**போராட்டமே நடத்துவோம்,** என்கிறார் காங்கிரஸ் தலைவர்.

**ராஜினாமா செய்யவும் தயார்!**—என்று முழக்கம் எழுப்புகின்றனர்.

ஏன் தெரியுமா? டில்லி, அசாமில், ஒரு எண்ணெய் ஆலை அமைக்க மறுத்துவிட்டது!

அசாமில் அமைப்பதற்குப் பதிலாக பீகாரில் பரூனி எனுமிடத்தில் அமைய அனுமதித்துவிட்டது!!

இதற்குத்தான் இத்துணைக் கண்டனங்களும்—எழுப்புவோர், வேறு யாருமல்ல, நேருவை வணங்குபவர்கள், டில்லிக்குத் தலை குனிபவர்கள் — காங்கிரஸ்காரர்கள்! எனினும், தங்கள் மாகாணத்துக்கு இழைக்கப்படுவது அநீதி யென்று கண்டதும், கட்சிக் கட்டுப்பாட்டையும் மீறத் துணிகின்றனர் — பதவியையும் வீசிட அஞ்சவில்லை—இந்த 22-ந் தேதி அஸாம் முழுதும் **அநீதி நாளும்** கொண்டாடச் சொல்லியிருக்கிறார்கள், காங்கிரஸ் கமிட்டிகளே!

**"அஸாம், தொழில் துறையில் பின்தங்கிக் கிடக்கும் இடமாகும். இதுபோலப் பின்தங்கிக் கிடக்கும் இடங்களை முன்னேறச்செய்யாமல், ஆலைகள் நிரம்பிய மத்திய இந்தியாவையே வளமாக்கினுல், என்ன அர்த்தம்?"**

கேட்கிறது, அசாம் காங்கிரஸ்! ஒரே ஒரு ஆலை—அந்த விஷயத்தில் டில்லிநடந்து கொண்ட ஓர வஞ்சனையைக் கண்டதும்—அஸாம் காங்கிரசார், தலை ஒடித்து எழும் வீரர்களாகிருர்கள்!!

ஆனல் இதோ, நாமும்தான் காங்கிரஸ்காரர்களைப் பார்க்கிருேம்—தேவிகுளம், பீர்மேட்டைப் பறிகொடுத்தார்கள்! அதிகப் பணம் கேட்கப்போய் மூக்குடைபட்டுத் திரும்பினுர்கள்! ஒரே ஒரு இரும்பாலை, எங்கள் சேலத்துக்கு—என்று கெஞ்சினர் — மறுப்புத் தரப்பட்டது; தரக் காரணமாயிருந்தவரே 'நமது' கிருஷ்ணமாச்சாரியார்! ஆலைகள் — பெருந்திட்டங்கள்—ஐந்தாண்டுத் திட்டத்தில் உரிய பங்கு — எல்லாவற்றிலுமே, நாமம்தான்! எனினும், இங்குள்ள "காமராஜர் காங்கிரஸ்" கமிட்டியில் தீர்மானம்போடுகிற அளவோடு சரி — டில்லிக்குப் போய்வருவதோடு சரி—நம்மைப்பார்த்துச் சீறுகிற அளவோடு சரி!!

ஒருமுறையல்ல, இருமுறையல்ல, இந்தப் பத்தாண்டுக் கால சுதந்திர ஆட்சியில், டில்லிக்கு இவர்கள் காவடி தூக்கிச் சென்ற சந்தர்ப்பங்கள் ஏராளம், ஏராளம். இந்தக் காரியத்துக்கென ஓமாந்தூரார் காலத்தில் ஒரு விமானமே வாங்கிவைத்திருந்தார்கள், அதில் ஓடி ஓடிப்போய், டில்லியைத் தெரிசித்தும், ஒரு பலனும் காணுததாலேயே ஓமாந்தூரார் கூறினுர், டில்லி ஓர வஞ்சனையுடன் நடக்கிறதென்று. அவருக்கு முன்பு இம் மாநிலத்தை ஆண்ட பிரகாசமும், டில்லியின் போக்கைக் குறை கூறத் தவறவில்லை. பிறகு முதல்வரான, குமாரசாமிராஜாவும் குறைபட்டுக்கொண்டார், டில்லி மாற்ருந்தாய் மனப்போக்குடன் நடப்பதாக! ஆச்சாரியாரும், டில்லியைக் கண்டிக்கலானுர்! சந்தர்ப்பம் வரும்போது, தற்போதைய ஆட்சியில் முக்கிய இடம் வகிக்கும் சுப்ரமணியமும் சோகிக்கிருர்! ஆனல், ஒருவருக்காவது அசாமில் ஏற்பட்டிருக்கும் துணிச்சல் வந்ததில்லை.

ஒரே ஒரு ஆலை!—இதற்கு, அசாம் காங்கிரஸ், எரிமலையாகிறது. கட்சியைவிட எங்கள் மாநில முன்னேற்றம், பெரிது!— என்கிறது.

இங்கோ,

ஆலைவிஷயம் மட்டுமல்ல!
தேவிகுளம், பீர்மேடு;
ஐந்தாண்டுத்திட்டம்.
இலங்கைத் தமிழர் அல்லல்.
கைத்தறியாளர் துயரம்.
இந்திக் கொடுங்கோன்மை!

இத்துணைப் பிரச்னைகள் உள்ளன! பல்லாண்டுகளாக உள்ளன!! இவைகளை டில்லி கவனிப்பதில்லை என்கிற மனக்குறையாவது காங்கிரஸ் தலைவர்களிடம் இல்லாமலிருக்கிறதா என்ருல், இருக்கிறது—ஆண்ட ஒவ்வொரு முதலமைச்சர்களும் முணகாமலிருந்ததில்லை. ஆயினும், ஒருவராவது, டில்லியை எதிர்த்துக் கேட்க முனைந்ததில்லை! மாருக, மானமிழப்பினும், **டில்லியைக்** கும்பிடுவதே மேல் எனக்கருதுகின்றனர்—**தமிழ்நாடு** என்று பெயரிடக் கூடாதென டில்லி விரும்பியதும், அதையே இவர்கள் மறுத்தனர் எனின், இவர் தம் தாசர் புத்தியினை விளக்கவும் வேண்டுமோ!!

அழுத பிள்ளை பால் குடிக்கும் என்பார்கள்—அதுபோல நேருபண்டிதரின் துரைத்தனத்திலே வல்லானுக்குத் தான் வாழ்வு. எடுபிடிபோல, எதைச் சொன்னுலும், சரி சரி என்று தலையாட்டுவோருக்கு, பலனும் பயனும் பூஜ்யம்தான். காமராஜர் காங்கிரஸ், சரியான எடுபிடி, எதைச் சொன்னுலும் அப்படியே ஏற்றுக் கொள்ளக் கூடியது என்பதை டில்லியினர் கண்டுகொண்டிருக்கின்றனர். அதனுல்தான் சமீபத்தில்கூட, டில்லி அமைச்சர் பண்டித பந்து, காமராஜர் மந்திரிசபையை முதுகில் தட்டிக் கொடுத்திருக்கிருர்! இப்படி தட்டிக்கொடுத்து, இவர்களை, வேலை வாங்கிக்கொள்ளலாம் என்கிற தைரியம் டில்லிக்கு ஏராளம் இருக்கிறது—ஏனெனில், அப்படிப்பட்டவர்களைத்தான், நாட்டு நலனை விட டில்லிக்கு **நல்லவர்களாகவும் படிந்தவர்களாக**வும் நடப்பதே தலையாய கடன் என்று கருதுகிறவர்களைத்தான், இங்குள்ள காங்கிரசில் நாம் காண்கிருேம். இல்லையெனில், 'அசாம்' இப்போதல்ல, எப்போதோ ஏற்பட்டிருக்கவேண்டும் இங்கு! இந்திய உபகண்டத்திலேயே, தென்னகத்தைப்போல வஞ்சிக்கப்படுகிற பகுதி எதுவுமே கிடையாது என்பதுதான் எல்லோருக்கும் தெரியுமே!!

★

# ஓட்டு—தருவதும் பெறுவதும்

இன்று உலகின் எந்த நாட்டிலும் — சுவிட்சர்லாந்தின் சில பகுதிகளைத் தவிர — மக்கள் நேரிடையாக ஆட்சியில் பங்கு பெறும் முறை இல்லை. ஆளும் பணியில் ஈடுபட்டிருப்பவர்கள் மக்களின் பிரதிநிதிகள் — அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

மக்கள், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு எண்ணிறந்த முறைகளைக் கையாண்டு வந்திருக்கின்றனர் இன்றுவரை! எனினும், மக்களாட்சியின் மகுடமாக — மனித இனத்தின் உரிமைகளைக் காக்கும் மகத்தான சாதனமாக — மருட்சியோ, மற்றெதுவோ இன்றி அவர்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு உற்றதோர் கருவியாக — இன்று வழக்கத்தில் இருந்துவரும் ரகசிய ஓட்டு முறை திகழ்கிறது.

இந்தமுறையை முதலில் கண்டுபிடித்தது யார்—எந்த நாடு முதலில் இதனைப் பின்பற்றியது—என்பனவெல்லாம் இன்றளவும் தெளிவாகத் தெரியவில்லை.

என்றாலும் இதாலி நாட்டில்தான் முதன் முதலில் இந்த முறை தோன்றியிருக்கவேண்டும் என்று பலர் கருதுகின்றனர். ஓட்டுப் பெட்டியினைக் குறிப்பிடும் ஆங்கிலச் சொல்லுக்கு "பந்துகளைக்கொண்ட பெட்டி" என்பதே நேரிடையான பொருள். இந்தச் சொல் ரோமானிய மொழியிலிருந்து வந்ததால் இவ்வாறு கருதப்படுகிறது. கி. பி. 1549-ல் இதாலியில் ரகசிய முறையில் தேர்தல் நடந்ததாம். அப்போது ஓட்டுப் பெட்டியில் போடப்பட்டது ஓட்டுச் சீட்டுகளல்ல — பந்துகள்!

சங்ககாலத் தமிழகத்தைப்பற்றி ஓரளவாவது புரிந்துகொண்டிருக்கிற நாம் — அன்று குடவோலை முறைமூலம் தேர்தல் நடந்ததென்று இலக்கியங்கள் மூலம் அறிந்துகொண்டிருக்கிற நாம் — அந்த முறைக்கும் இன்றைய ரகசிய ஓட்டுமுறைக்கும் இருக்கின்ற எண்ணிறந்த ஒருமைப்பாடுகளை உணருகின்ற நாம் — அரசியல் அறிஞர்களிடையே இருக்கின்ற இந்தக் கருத்து எவ்வளவு தூரம் தவறானது என்பதை உணருகிறோம். எனினும் என்ன செய்வது? இன்றளவும் தமிழகத்து வரலாறு, விளக்கமாக உலகத்துக்குத் தெளிவுதரும் வகையில் எழுதப்படவில்லையே! விளக்கமான வரலாறு இருக்கின்ற காரணத்தால்தானே இதாலி அந்தப் பெரும் புகழைப் பெற்றுச் செல்லுகிறது இன்று!

அதைவிட வேடிக்கையொன்றும் இருக்கிறது! இன்று, ஜனநாயகத்தின் இருப்பிடமாக அல்லவா இங்கிலாந்து கருதப்படுகிறது! அந்த நாட்டில் ரகசிய ஓட்டுமுறை பழக்கத்திற்கு வந்ததோ மிகவும் அண்மையில்தான். அதுவும் எத்தனையோ எதிர்ப்புகளுக்கும், ஏளனத்திற்குமிடையே!

இதாலியில் பழத்திற்கு வந்து ஏறக்குறைய எழுபது ஆண்டுகட்குப் பின்னர், இந்த முறையைப் பின்பற்றுவது பற்றி இங்கிலாந்தில் பேசப்பட்டது. கிழக்கிந்தியக் கம்பெனியின் நிர்வாகம் சீர்படுவதற்காக, நிர்வாகஸ்தர்களிடையே ரகசிய ஓட்டு முறையைப் புகுத்துவதற்காக **சர்ஜான் ஹாலோவே** என்பவர் முயன்றார்—எனினும் தோல்வியே அவர் கண்ட முடிவு. இங்கிலாந்தின் அப்போதைய மன்னன் முதலாம் ஜேம்ஸ் "இத்தாலியர்களின் ஏமாற்றுவித்தை" என்று இதனைக் குறிப்பிட்டார்.

அது மட்டுமல்ல! அரசியல் கட்சிகள்கூட ரகசிய ஓட்டு முறையை ஆங்கில நாட்டுப் பழக்கங்களுக்குப் புறம்பானது எனக் கண்டித்தன. பகிரங்க ஓட்டு முறையின் பற்பல தீங்குகளையும் உணர்ந்திருந்தும்--பணம் கொடுத்து ஓட்டு வாங்கிடும் பொல்லாங்கினைப் பல இடங்களிலும் கண்டும் பொது மக்களின் உரிமைகளுக்கு இந்த முறை பெரிதும் குந்தகம்விளைவிப்பதனை அறிந்தும் — அரசியல் கட்சிகள் அனைத்தும் அதனைக் கைவிட விரும்பவில்லை. புதிய முறை — ரகசிய ஓட்டு முறை — மக்களின் உள்ளத்தில் தீங்கு பயக்கும் எண்ணங்களைத் தூவிவிடும் என்று அவர்கள் கருதினர்.

**டைம்ஸ்** என்னும் இதழ் "மக்கள் தங்கள் அரசியல் கருத்துக்களை மறைப்பது மனிதத் தன்மைக்குப் புறம்பானது" என்று எழுதியது! என்றாலும், அவலமாக, அநாகரிகமாக ஒரு காலத்தில் கருதப்பட்ட இந்த ரகசிய ஓட்டு முறை —இன்று அருமையானதெனப் புகழப்பட்டு அரசுகள் பலவற்றால் பின்பற்றப்படுகிறது!

ஓட்டளிக்கும் முறையில் எண்ணிறந்த மாறுதல்கள் ஏற்பட்டதுபோல், ஓட்டுபெறும் முறையிலும் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு வந்திருக்கின்றன

இன்று வரை! கோவில் கட்டித் தருவதாகவோ, குளம் வெட்டித் தருவதாகவோ—சாலை அமைப்பதாகச் சொல்லியோ, சத்திரம் கட்டுதற்கு நன்கொடை தந்தோ—இத்தனையிலும் பலனில்லையென்றால் நேரிடையாகவே பணத்தைக் கொடுத்தோ — ஓட்டு சேகரிக்கும் பழக்கத்தினை நாம் கடந்த தேர்தலில் கண்டிருக்கிறோம்.

எனினும் இங்கிலாந்து நாட்டில் 1784-ல் ஓரிடத்தில் ஓட்டு சேகரிக்கப்பட்ட முறை சுவை மிகுந்தது! சொன்னால்கூட நம்ப முடியாது நம்மில் பலரால். கவென்ட் கார்டன் என்றொரு தொகுதி. ஜேம்ஸ்பாக்ஸ் என்ற பிரபல அரசியல் வாதியும், டோரிக் கட்சியைச் சேர்ந்த மற்றொருவரும் போட்டியிட்டனர் அதில். தேர்தலில் சூடு ஏறஏற, போட்டி அதிகரித்தது. இந்த நிலையில் இளவரசி ஜார்ஜியானு என்பவளும் களத்தில் இறங்கிவிட்டாள். மேடையேறி முழங்கியோ — இன்னிசைப் பாடல்கள் பாடியோ—ஏராளமான செல்வத்தினை எடுத்து வீசியோ — ஓட்டு சேகரிக்க முயலவில்லை அவள்! அந்த நாட்டு இளவரசிகளுக்கிடையே எழிலரசியெனக் கருதப்பட்ட அவளேன் இவ்வாறு செய்வாள்? அவளிடம் அழகு இருந்ததே அடகுவைக்க! எனவே பகிரங்கமாகவே ஒரு அறை கூவல் விடுத்தாள்—தன் நண்பர் ஜேம்ஸ் பாக்ஸ்க்கு ஓட்டளிப்பவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு முத்தம் தரப்படும் என்று! பொன்னோ பொருளோ—புகழோ, பதவியோ—இவை எதுவும் தரமுடியாத இன்பத்தினை ஜார்ஜியானுவின் இதழமுதம் தர முடியும் என்று அன்று கருதியவர்கள் ஏராளம்! கேட்கவா வேண்டும் வாக்காளரின் குதூகலத்தை?

"வெட்கம், மானமற்று இளவரசி நடந்து கொள்ளுகிறாள்" எனக் கண்டித்தார் எதிர்க்கட்சி அபேட்சகர், எனினும் ஜார்ஜியானுவின் முடிவை மாற்றிட முடியவில்லை அவரால்! எனவே வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் எனத் தீர்மானித்தார். அதன் பயனாக அவரும் ஒரு ஆரணங்கைக் கொண்டு வந்து நிறுத்தினார் வாக்காளர்களிடையே! அவளோர் சீமாட்டி; பெயர் சாலிஸ்பரி,

வாக்காளர்களுக்கிடையில் ஒரே குழப்பம். அவர்கள் செய்ய வேண்டியிருந்த முடிவு யாருக்கு வாக்களிப்பது என்பதல்ல—இந்த இருவரில் எந்த நாரீமணியின் முத்தத்தைப் பெற்றால் மகிழ்ச்சியும், மனக்கிரக்கமும் மிகுதி என்பதுதான்! தேர்தலும் வந்தது—ஜேம்ஸ் பாக்ஸ் வென்றார். அவரது வெற்றிக்குக் காரணம் அவரது தகுதியோ, திறமையோ அல்ல—முத்தம் தரும் கலையில் ஜார்ஜியானு பெற்றிருந்த முழுப் பக்குவம்தான் என்கிறார், ஒரு வரலாற்றாசிரியர்!

இத்தகைய நிகழ்ச்சிகளையெல்லாம் கண்ட இங்கிலாந்து, புதிய பல சட்டங்களை இயற்றியது. வாக்காளர்கள் தம்பால் ஈர்க்கப்படுவதற்கான முயற்சிகள் எதிலும் அளவுக்குமீறி அரசியல் கட்சிகள் ஈடுபடாமலிருப்பதற்கான சட்டங்கள் இயற்றப்பட்டன. தேர்தலுக்கென்று அபேட்சகர்கள் சில குறிப்பிட்ட செலவுகளைத் தவிர எதுவும் செய்யக்கூடாதென்று சட்டம் வகுக்கப்பட்டது. கொள்கைகளை விளக்குவதற்கான வழிவகைகளுக்கு ஏற்படும் செலவுகளே அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்டன.

1951-ம் ஆண்டில் இங்கிலாந்து அரசாங்கத்துக்கும் டைம்ஸ் இதழுக்குமிடையே நடந்த ஒரு வழக்கு மிகவும் விசித்திரமானது! தேர்தல் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் அந்த இதழில் ஒரு விளம்பரம் வெளியிடப்பட்டதாம்! அதில் மலேயா நாட்டு ரப்பர், தகர ஆலைகளில் லாபக் கட்டுப்பாடு செய்யப்பட்டது பற்றிக் கண்டித்து எழுதப்பட்டிருந்ததாம்! கட்டுப்பாடு செய்ததோ, அன்று வரை பதவியில் இருந்த அட்லியின் அரசாங்கம். எனவே, இந்த விளம்பரம் கன்சர்வேடிவ் கட்சியின் சார்பாக — தேர்தலில் அதற்குத் துணை செய்வதாக — இருக்கிறதென்று அரசாங்கத்தின் சார்பில் வாதாடப்பட்டது! மற்றும் அந்தவிளம்பரத்திற்கென்றுசெலவிடப்பட்ட 800 பவுண்டும் 'தேர்தல் செலவுக் கட்டுப்பாட்டுச் சட்ட'த்திற்கு முரணானது என்றும் கூறப்பட்டது!

அட்லி அரசாங்கத்தின் சட்டம் அந்தத் தொழில்களுக்கு ஊறு பயக்கிறது என்பதை விளக்கிடுவதற்காகவே அந்த விளம்பரம் போடப்பட்டதே தவிர வேறெந்த அரசியல் காரணத்திற்காகவும் அல்ல என்பது டைம்ஸ் இதழின் வாதம்!

முடிவில் தீர்ப்பு டைம்ஸ் இதழுக்குச் சாதகமாகவே கிடைத்தது.

குற்றச்சாட்டுகள் தவறானவை என்று நீதி மன்றம் தீர்ப்பளித்தது! எனினும் இந்த வழக்கு இங்கிலாந்தின் ஜனநாயக வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம்—தேர்தலில் நேர்மையினை எவ்வளவு தூரம் அந்த நாட்டு மக்களும், அரசியல் கட்சிகளும் மதிக்கின்றன என்பதை விளக்குவதற்கான சிறந்ததோர் எடுத்துக்காட்டு!

இங்கென்ன நிலை? சட்டமன்றத்திற்கோ, பாராளுமன்றத்திற்கோ தேர்தலில்நிற்கும்அபேட்சகர்இந்த அளவு செலவு செய்யலாம் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது! சட்டமன்றத்திற்கான அபேட்சகர்கள் ரூ9000 வரை செலவு செய்ய அனுமதிக்கின்றது நமது மாநில அரசாங்கம்! இந்தத் தொகை ஒவ்வொரு மாநிலத்திலும் மாறுபடுகின்றது. இந்த அளவு உயர்ந்த தொகை ஏன் அனுமதிக்கப்பட வேண்டும்? நமது நாவலர் அவர்கள் ஒரு கூட்டத்தில் குறிப்பிட்டது போல இந்தத் தொகை அரசாங்கத்தால் வரையறுக்கப்பட்ட நியாய விலை! அதில் இன்னும் வேடிக்கை என்னவெனில் இந்த "நியாய விலை"யில் ஓட்டுகளைப் பெற்றவர்கள் தொகை மிக மிகக் குறைவென்று தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர்களிலேயே சிலர் பேசுகின்றனர்—அதுவும் சட்டமன்றத்தில்!

எனவே இந்தத் துணைக்கண்டத்தில் பெரும்பாலும் ஓட்டு பெறப்படுவதில்லை—வாங்கப்படுகிறது! பெறுவதற்கும், வாங்குவதற்குமிடையே இருக்கின்ற வேறுபாடுகள் எண்ணிறந்தன! இந்த முறையில் மாறுதல் ஏற்பட்டால்தான்—ஓட்டுப் பெறும் முறையில் நேர்மையும் ஒழுங்கும் இருந்தால்தான்—ஓட்டு தரும் முறையில் ஏற்பட்டுள்ள புரட்சி, ரகசிய ஓட்டு முறை, பயனுள்ளதாக—உண்மையான ஜனநாயகத்தை வளர்ப்பதாக—அமையும்.

★

# சிரிக்கும் உலகம்

உலகத்திலே எந்த நாட்டுக்குப்போனாலென்ன? அங்கங்கேமக்களுக்கு நகைச்சுவை இருக்கிறது. எதைப்பற்றியும் தங்கள் தங்கள் இயல்புக்கு ஏற்றபடி கையாண்டி செய்து சிரிக்கிறார்கள். இர்விங் ஹாஃப்மான் என்பவர், விமான மூலம் பல நாடுகளுக்குச் சென்று சுற்றிப் பார்த்து, அவைகளில் நிலவும் விகடத் துணுக்குகள், விநோதச் செய்திகள் சிலவற்றைச் சேகரித்து, 'காலியர்ஸ்' பத்திரிகைக்கு ஒரு கட்டுரை உதவிருக்கிறார். இது அவர் எழுதியிருப்பது:

முதல் முதல் உலகத்தை விமான மூலம் சுற்றி வந்தவன் நான் அல்ல. மிக முக்கியஸ்தர்கள் பலர் எனக்கு முன்னே சுற்றி வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களெல்லாம் பிரமாதமான கருத்துக்களைத் திரட்டி வந்திருப்பார்கள், நானோ நிறைய நிறைய விகடத் துணுக்குகளையும் ரஸமான கதைகளையுமே திரட்டி வந்திருக்கிறேன். ஏனென்றால், நான் நகைச்சுவைப் பித்தன்.

முதலில் இங்கிலாந்தில் போய் இறங்கினேன். ஆனால் அங்கே அதிக நாள் தங்கவில்லை. சர்க்காரின் எத்தனையோ கட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியும், பிரிட்டிஷ் மக்களின் ஜனநாயக உணர்ச்சி குன்றவில்லை. திறந்த மனசு உள்ளவர்கள். இதற்கு உதாரணம் வேண்டுமா? அப்படியானால் வொயிட்ஹால் மண்டபத்துக்குப் போங்கள். தலைவெட்டி மாண்ட முதலாவது சார்லஸ் மன்னரின் சிலையை ஒரு மூலையில் காணலாம்; அவருடைய தலையை வெட்டிய ஆலிவர் க்ராம்வெல் என்ற ராஜ தந்திரியின் சிலையையும் மற்றொரு மூலையில் காணலாம். பாரபட்சம் இல்லாமல் இரண்டையும் வைத்திருக்கிறார்கள்!

இங்கிலீஷ் கால்வாயைத் தாண்டிப் பிரான்ஸுக்குச் சென்றேன். பிக்காஸோ என்ற பிரபல கம்யூனிஸ்ட் ஓவியரின் சித்திரங்களைப் பற்றிப் பிரான்ஸில் ஏராளமான விகடத் துணுக்குகள் சமீபத்தில் தோன்றியுள்ளன. இகார் ஸ்ட்ராவின்ஸ்கீ என்ற சாகித்திய நிபுணரின் உருவப் படம் ஒன்றைப் பிக்காஸோ தீட்டியிருந்தாராம். அதைப் பால்கன் நாடு ஒன்றின் சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்துவிட்டார்களாம். அது தங்கள் நாட்டு எல்லைக் கோட்டைகளின் படம் என்று சந்தேகித்தே அவர்கள் இப்படிச் செய்தார்களாம்!

பிரெஞ்சு மந்திரிகள் திரும்பத் திரும்ப மாறிக்கொண்டே இருப்பதால், ஒரு போட்டோ நிபுணருக்கு நல்ல சம்பாத்தியம். புதுப் புது மந்திரிகளைப் படம் பிடித்துக் கொண்டேயிருப்பதால், அவருக்குத் தொழில் மந்தமே இல்லை.

வியாபாரம் துரிதமாக நடக்க நடக்க, ஐரோப்பாவில் பிரஜா உற்பத்தியும் துரிதப் பட்டிருக்கிறது. டென்மார்க் மன்னர், ஒரு சிறு நகரத்தில் புதிய கட்டிடம் ஒன்றைத் திறந்து வைத்தார். அப்போது மேயரைப் பார்த்து, "தெருவெல்லாம் ஒரே குழந்தை மயமாயிருக்கிறதே". என்றார். "மன்னர் பெருமானே, இந்த நன்னாளுக்காகத்தான், பல வருஷங்களாக நாம் பிரயத்தனம் செய்து வருகிறோம்" என்று பதிலளித்தார் மேயர்.

கிழக்காப்பிரிக்காவைச் சேர்ந்த நைரோபி நகர மிருகக்காட்சிச் சாலையில் ஓர் எச்சரிக்கையை ஒட்டியிருக்கிறார்கள். அதில் "சிங்கத்தை உபத்திரவம் செய்கிறவர்கள் தண்டனைக்குள்ளாவார்கள்" என்று எழுதியிருக்கிறார்கள். இந்த எச்சரிக்கைக்கு அருகிலே மோட்டார் ஓட்டிகளை எச்சரிக்கும் மற்றொரு விளம்பர போர்டும் தொங்குகிறது. அதில் "யானைக்கு முதலில் வழிவிடுங்கள்" என்று எழுதியிருக்கிறது.

ஆப்பிரிக்கச் சுதேசிகளுக்கு, நவீன நாகரிக வசதிகளை அநுசரித்து நடந்துகொள்ளத் தெரியவில்லை. அங்கே உள்ள பிரிட்டிஷ் தோட்டக்காரர் ஒருவருடைய யந்திரக் கலப்பை உடைந்து போயிற்று. அதைப்பற்றி அவர் வருத்தத்தோடு என்னிடம், "இங்கே சுதேசித்தொழிலாளிகள் போக்கு எப்படி இருக்கிறது, தெரியுமோ? 'எங்களுக்கு வேலை கொடுங்கள்; யந்திரத்தைத் தீர்த்துவிடுகிறோம்' என்று வாயால் சொல்லாத தோஷம்; கையால் இப்படிச் செய்து காட்டிவிடுகிறார்கள்" என்று சொன்னார்.

பாலஸ்தீனத்துக்குச் சென்றேன். உலகத்திலேயே மிகமிகக் குறுகியதேசம் அதுதான் என்று நினைக்கிறேன். அதன் கடற்கரையோரத்தில் ஒரு ரெயில் பாதை ஓடுகிறது. "பிரயாணிகள் நம் தேசத்துக்கு வெளியே தலையை நீட்டக்கூடாது" என்று ரெயில்வே கமிஷனர் ஓர் எச்சரிக்கைபோர்டு போட்டிருக்கிறார்.

பெண் சபலமுள்ள யாத்திரிகருக்குப் பெரிய சொர்க்கம் போன்றது சீனாவில் உள்ள ஹாங்காங் நகரந்தான். மிக அழகான சீனப் பெண்கள், தேகத்தோடு ஒட்டிய உடை உடுத்திக்கொண்டு, கண்டவர் மனதைக் கவரும் வசீகரத்துடன் தெருவெல்லாம் திரிகிறார்கள், ஒரு பெண்ணின் காலை நீங்கள் நோக்கினால், அவள் சற்றும் கோபப்படாமல், "ஏன்? ஏதாவது கிழே போட்டுவிட்டீர்களா?" என்றுதான் கேட்பாள்.

அங்கிருந்து ஆஸ்திரேலியாவுக்குப் போயிருக்கலாம். ஆனால், நான் போகவில்லை. ஆஸ்திரேலியப் பத்திரிகை ஒன்றில் சமீபத்தில் வெளியான செய்தி ஒன்றை மட்டும் குறித்து வைத்திருக்கிறேன்-

ஆஸ்திரேலியத் தொழிலாளி ஒருவர். வேலை செய்யாமலே பிழைக்கப் புதுமையான வழி ஒன்றைக் கண்டு பிடித்துவிட்டாராம். அவர் ஒரு ஸ்தாபனத்தில் புதிதாகநியமனம்பெறுவார். பிறகு வெளியே போய், முதலாளிக்கு யாரோ 'போன்' செய்வதுபோல் கூப்பிட்டுத் தம்மைப்பற்றித் தாமே பெரிய மோசக்காரன் என்றெல்லாம் திட்டுவார். மறுநாள் வேலைக்குப் போனால், முதலாளி ஏன் அவரை வைத்துக்கொள்கிறார்? ஒருவாரச் சம்பளத்தைக் கையிலே கொடுத்து, "போய் வாரும், ஐயா" என்று விடை கொடுத்துவிடுவார். தொழிலாளி வேறு இடம் தேடுவார். அங்கும் இதே கதைதான். இப்படியே பல மாதகாலம் அவர் சம்பாதித்து

வந்தார். கடைசியில், அவர் தந்திரம் வெளியாகிவிடவே, அவரை அதிகாரிகள் பிடித்து விட்டார்கள்.

ஆஸ்திரேலியாவுக்குப் பதிலாக ஜப்பானுக்கு நான் சென்றேன். யுத்தத்துக்குப் பின் ஆறு வருஷ காலம் அந்நியரின் ஆக்கிரமிப்புக்குள் இருந்தும், ஜப்பானியர் இன்னமுங் கூடச் சக்ரவர்த்தியைத் தெய்வமாகத்தான் தொழுகிறார்கள். பல தலைமுறைகளாகக் கலப்பு மணம் புரிந்து புரிந்து ராஜவம்சத்தில் மேதைகளே பிறந்தாலும், அபூர்வமாகச் சில அசடுகளும் பிறந்துவிடுகின்றன. ஹிரோ ஹிட்டோ இப்போது சக்கரவர்த்தி. இவருடைய தகப்பனார் யோஷிஹிட்டோ. சபையில் ராஜப் பிரகடனம் ஒன்றை யோஷிஹிட்டோ படிக்கவேண்டியிருந்தது. அவருக்கு அப்போது என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. அந்தப் பிரகடனம் எழுதியிருந்த காகிதத்தைக் கையில் எடுத்து ஒரு குழாயாகச் சுருட்டினார். ஒற்றைக் கண்ணால் ஜிகினாக் கண்ணாடி பார்ப்பதுபோல அந்தக் குழாய் வழியாகப் பார்க்க ஆரம்பித்தார். இந்த விநோதம் 30-வருஷங்களுக்கு முன் நடந்தது. ஆனால், இதை வெளியே விடாமல் அமுக்கி விட்டார்கள். எந்தப் பத்திரிகையும் பிரசுரிக்கவில்லை. ஆயினும், அத்தனை ஜப்பானியருக்கும் இது தெரிந்திருக்கிறது. இப்படி ஒரு காகிதத்தைச் சுட்டிக் கண்ணைச் சுவித்துப் பார்த்தால் போதும்; அவர்கள் குதித்தாடத் தொடங்குகிறார்கள்.

பிலிபைன் தீவில் மணில்லா நகருக்குச் சென்றேன். பிலிப்பைன் சரித்திரத்திலேயே முதல் முதலாக மலிவான பல்குச்சி (டூத்-பிக்) செய்யும் தொழிற்சாலை ஒன்றைப் புதிதாகத் திறந்தார்கள். அதைப் பெரிய விழாப்போல் கொண்டாடினார்கள். அங்கே ஓர் இன்ப மாளிகை இருக்கிறது, அதில் பல விதக் கேளிக்கைகளை நாம் அநுபவிக்கலாம். அவைகளுள் ஒன்று விளக்கை அணைத்துவிட்டு நடக்கும் டான்ஸ். ஆமாம்; ஏதோ தவறிச் சொல்கிறேனோ என்று நினைக்காதீர்கள்; விளக்கை அணைத்துவிட்டு நடக்கும் டான்ஸ் தான்,

—[illegible].

# சங்ககால இலக்கிய நாகரீகம்

[கா. அப்பாதுரை எம். ஏ., எல். டி.]

சங்க இலக்கியங்கண்ட தமிழகம் இன்றைய தமிழகத்தினும் மிக உயர்ந்த நாகரிகமுடையது என்பதை அதில் சிறிது பயின்ற மாணவர் கூடக் காணக்கூடும். தமிழர் அன்று வெறும் உழவர்களும் நாட்டுப் புறத்தாரும் அல்லர். வாணிகமும் பல் தொழில் வளமும் வாய்ந்த நாடு நகர வாழ்வு உடையவர்கள். அவர்கள் நாகரிகம் நாட்டுப்புற சார்பானதன்று; சிறப்பாக நகரச் சார்பானது என்பதை நாகரிகம் என்ற சொல்லே காட்டும். அவர்கள் இசைக் கருவிகள் இன்றைய தமிழர் இசைக் கருவிகளையும்பிற நாட்டினர் இசைக் கருவிகளையும் விடப்பல. அவர்கள் உடுத்த உடைவகைகள், அவர்கள் பெண்டிர் ஒப்பனைக்குப் பயன்படுத்திய வகைவகை நறுஞ்சுண்ணங்கள், நலம்புனை வண்ணங்கள் ஆகியவையும் இக்கால மேனாட்டு நகர மக்களையும் நாண வைக்குமளவு பலப்பல.

பொருளியல் வாழ்விலும் அரசியலிலும் கலைவாழ்விலும் தமிழன் இன்றிருப்பது போல, இடைக்காலத்திலிருந்தது போலக் கூட; அடிமைத் தனத்தில் தோய்ந்திருக்கவில்லை. இன்று தமிழகம் இந்திய உபகண்டத்திலேயே பிற்பட்டு இருக்கிறது. இடைக்காலத்தில், கம்பர் காலத்தில், அப்பர் காலத்தில் தமிழன் அரசியலில் முற்பட்டிருந்தான். ஆனால் கலையில், சமயத்துறையில் சமூகத்தில் அடிமைப் பண்புக்கு இடங்கொடுத்திருந்தான். சங்க காலத்தில் எல்லாத் துறைகளிலும் தமிழன் முற்பட்டேயிருந்தான். தமிழ்க வேளிர்கள் பிறநாட்டினருக்கு மட்டுமின்றித் தம் நாட்டரசர்க்குக்கூட வணங்க மறுத்தார்கள். பாரி, அதியமான், ஓரி முதலியோர் சேர சோழ பாண்டியருடன் போட்டியிட்டனர்.

புலவர்கள் அரசுக்கரசு நட்பாடித் தனி உயர்வாழ்வு வாழ்ந்தனர். இலக்கியம் வாழ்விடையே மலர்ந்தது—நாட்டு வாழ்வில் வளர்ந்தது. அது வேறுஎந்த இலக்கியத்துக்கும் நாரிகத்துக்கும் தலை வணங்கவில்லை. பொருளியல் துறையிலோ தமிழன் செல்வம் எங்கும் போகவில்லை. அவன் தொழில், வாணிக வளங்களால் உலகின் செல்வ முழுவதும், உரோமபுரிப் பொற்காசுகளாக, கிரேக்கர் வெள்ளி பொன் கோப்பைகளாக, மதப்புட்டிகளாக, சோனகர் (அராபியர்) குதிரைகளாக, துருக்கிய யவளர் மணப்பொருள்களாக, இமயவர் வெண்கவரிகளாக, ஈழத்தார் மாணிக்கங்களாக அவனிடம் வந்து குவிந்தன.

கல்வியில் இலக்கியத்தில் சங்க காலத் தமிழன் நிலை இன்றைய இந்தியாவையும் இடைக்கால இந்தியாவையும் மட்டுமன்றி இன்றைய மேனாடுகளையும் தலைகுனிய வைப்பதாகும். அறிவியல் நூல்களை மேனாடுகளிலிருந்து மொழி பெயர்க்க முற்படும் இன்றைய இந்தியாவின் நிலையில் ஒரு நூற்றாண்டில் ஏற்படும் நல்லிலக்கியத்தையும் புலவர் தொகையையும் பெண் புலவர் தொகையையும் அளவுகோலாக வைத்துப் பாருங்கள். கம்பர், அப்பர் காலத்துடன் இதனை ஒப்பிட்டால் இலக்கிய அளவு, புலவர் தொகை பெண் புலவர் தொகை அந்நாள் மிகுதி என்பது காணலாம். கம்பராமாயணம்போன்ற, தேவாரம் போன்ற கவிதை நூல்கள் அன்று புலவர் நூல்களாய் இயங்கவில்லை. சமயப் பிரச்சார வெளியீடாகவே இயங்கின— அதுவும் அச்சில்லாத காலத்தில் 1000 ஆண்டுகட்கு முற்பட்ட சங்க காலத்தை இவ்விரண்டு காலத்துடனும் ஒப்பிடுங்கள். இரண்டு நூற்றாண்டுகளுக்குள் ஏற்பட்ட இலக்கியத்தில் சங்கம் இருந்தாய்ந்து பொறுக்கியெடுத்த சில புலவர்களின் சில நூலகளின் சில பகுதிகளே தொகுத்து வைக்கப்பட்டன. அவற்றின் ஒருபகுதியே இன்றுமீந்துள்ளது. அதில் நமக்கு 500-க்கு மேற்பட்ட புலவர்களின் பாடல்கள் உள்ளன; அவையும் எத்தகைய உயரிய பாடல்கள்! எது மேல் எது கீழ் என்று கூற முடியாதபடி எல்லாம் ஒத்த மணிகளாகப் பொறுக்கியடுக்கப்பட்ட திறன்தான் என்னே! இரண்டு நூற்றாண்டு அதாவது நாலைந்து தலைமுறைக்குள் பொறுக்கியெடுத்த புலவர்களில் எஞ்சியவர் தொகை ஐந்நூறு. அதில் எல்லா மரபினர்களும், எல்லா தொழிலினரும், எல்லாத் தமிழக மாவட்டத்தினரும் உள்ளனர்! பெண்கள் முப்பதுக்கு மேற்பட்டவர். தலை சிறந்த தமிழ்ப் பெரும் புலவர் ஔவையார் முதலாக அவர் பாடலுக்கு ஒப்பாகபாடியவரே அத்தனை பேரும். அதிலும் எத்தனை மரபினர்—எயினர், பேய்மகள் முதலியோர் உள்ளனர். இத்தனை பெண் புலவர் இத்தனை சிறந்த புலமையுடையவர் உலகின் வேறு எந்த மொழியிலக்கியத்திலும் காணமுடியாது.

புலவர்களின் உயர்வு தாழ்வு காட்ட அக்காலத்தில் வேறுவழியில்லை போலும்! பெரும் புலவர் என்று காட்ட அவர்கள் பாடல் தொகை தான் பத்து. நூற்றுக்கணக்காகத் தரப்பட்டன. ஷேக்ஸ்பியர் கால இங்கிலாந்தில் "பறக்கும் பறவை எதனிடையேயும் ஒருபாட்டுப் பாடாப் பறவை கிடையாது" என்று கூறப் படுவதுண்டு. தமிழரிடை அன்று புலமை பெற்றவரெல்லாம் நக்கீரர், கபிலர், பரணருடனொப்ப ஒருபாட்டுப் பாடினர் போலும்! ★

# அரசியல் மேல்(ல்)தாவிகள்

[ஏ. கலைவாணன் பி. ஏ.]

**சிங்கார** வாழ்வுக்கும் செல்வ போகத்திற்கும் ஆசைப்பட்டு திசைமாறிப்போன 'அரசியல் மேல்(ல்)தாவிகள் பலரை வரலாறு சித்தரித்துக்காட்டுகிறது. அத்தகைய அரசியல் மேல்(ல்)தாவிகளில் ஒருவனைத்தான் நமக்கு அறிமுகப்படுத்துகிறான் ஆங்கிலக்கவிஞன் பிரௌனிங்.

அவன்... இலட்சியப் பாதையில் ஏறுநடைபோட்டுக்கொண்டிருந்தோன். விடுதலைப் பாசறையில் தாக்கவும் தன்னைக் காக்கவும் பயிற்சிபெற்ற வீரன். அறிவுப் பட்டாளத்தின் வழிகாட்டி. பொங்கிவரும் தன் கவிதை வெள்ளத்தால் புத்துணர்ச்சி ஊட்டிவந்த புலவன். தோள்களோடு தோளிணைந்து தொண்டுபுரிந்தோன். அன்னவன்தான்... இன்று சொத்தும் சுகபோகமும் உலாவிடும் மாற்றார் உப்பரிகைக்குச் சென்றுவிட்டான். இலட்சியத்தைக் கைவிட்டான்; அலட்சியமாக அள்ளி வீசப்பட்ட சிலபல பொற்காசுகளுக்கு அடிமைப் பட்டான்.

யார் அவன்? பெயர் குறிக்க பிரௌனிங் விரும்பவில்லை போலும். இயல்பைச் சுட்டிக் காட்டி இரங்குதல் மட்டும் செய்கிறான். ஆனாலும் திறனாய்வாளர்கள் மட்டும் சும்மா இருந்துவிடவில்லை.

கவிஞனின் காலம்—சமகாலத்தோர்—பாடப்பட்ட கருத்துக்கும் நிகழ்ச்சிக்கும் பொருந்தி வரும் பெருமகன் — இப்படி ஆராய்ந்து ஏற்றதொரு விடையும் கண்டுள்ளனர். கவிதையில் கிடைத்த இரண்டொரு அகச் சான்றுகளும் அவர்கள் கருத்துக்கு பலமளிக்கின்றன. ஆயின் அவன் யார்? கேட்டால் திகைப்பும் ஐயமும் கிளம்பும். ஆம். அவன்தான் ஆங்கிலக் கவிதைச் சோலையில் மாங்குயிலெனக் கூவிடும் வில்லியம் வோர்ட்ஸ்வொர்த்.

பிரௌனிங் ஒரு விடுதலை விரும்பி. அவனுக்கு லிபரல் கட்சியிடம் அதிகப் பற்றுதல். முன்னேற்றமும் விடுதலைக் கொள்கையுமே அவன் முழக்கம். அதே காலத்தில் வாழ்ந்த வோர்ட்ஸ்வொர்த்தும் விடுதலைக் கொள்கையில் அபிமானியாகத்தான் இருந்தான். ஆனால் அவன் வாழ்க்கையில் ஒரு திருப்பமாக பிரஞ்சுப் புரட்சி அமைந்தது. அப்போது வீழ்ந்த சடலங்களும் சூழ்ந்த கண்ணீர் மண்டலமும் அவன் இதயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தின. மெள்ள மெள்ள தன் இலட்சியத்தை துறந்து முடிவில் ஒரு "கன்சர்வேடி"வாகவே மாறிவிட்டான். 1842-ல் அவனுக்கு பென்ஷனாக 300-பவுன்கள் அளிக்கப்பட்டது. 1843-ல் அரசாங்க கவிஞர் பதவியையும் ஏற்றுக்கொண்டான். விடுதலைக் கொள்கையில் விலகுதல் இல்லாத பிரௌனிங்குக்கு இச்செயல்கள் மிகுந்த வேதனையை அளித்தன. "சொல்லாலும் செயலாலும் வளர்த்த இலட்சியத்தை சுகபோகத்திற்கு பலியாக்கிச் செல்வதா" என்று குமுறினான். அவன் இதய உணர்ச்சிகள் யாவும் கவிதையாக உருப்பெற்றன. பிரௌனிங் எழுதிய "Lost Leader" என்ற இந்தக் கவிதை 1845-ல் வெளிவந்தது.

"அவன் நம்மைவிட்டு விலகி அயலார் பாசறைக்குப் போய் விட்டான் — வேறு எதற்குமல்ல, ஒரு கையளவு வெள்ளிக்காக— அங்கியிலே அணிந்துகொள்ளும் விருதுக்காக. நம்மிடம் இல்லாத ஒன்றை நாடி அவர்களோடு சேர்ந்துகொண்டான். அவர்களோ—பொன்னும் மணியும் அள்ளி வீசும் வாய்ப்பும் வசதியும் பெற்றோர். அளித்ததோ வெள்ளி — அதுவும் மன நிறைவோடு அல்ல. அவன் நம்மிடை இருந்த போது, நமக்கென கிடைத்தது செம்புதான். ஆனாலும் நாம் அவனுக்கு இருந்த முழுமையும் அர்ப்பணித்தோம் — இதயம் நிறைவோடு. கிழிந்த ஆடைதான் அன்று — அவனுக்கோ அது மிளிர்கின்ற ராஜ உடை. ஆம், அந்த அளவுக்கு அவனிடம் அன்பு செலுத்தினோம், அவன் நடந்த பாதையில் தொடர்ந்தோம், பெருமைப்படுத்தினோம். 'வாழவும் மாளவும் அவனையே இலட்சியமாகவிருத்துக்கொண்டோம். அவன் இன்று நமைவிட்டுப் பிரிந்தான்"

கவிதையின் ஒவ்வொரு சொல்லிலும் கண்ணீர், சோகம் ததும்புகின்றன. வேதனை எரிக்கும் அவன் உள்ளத்திரையில் ஷேக்ஸ்பியரும், மில்டனும் பர்ன்ஸ்ம் ஷெல்லியும் மின்னலிடுகின்றனர்.

ஆம், அந்தக் கவிஞர் பரம்பரையில் ஒரு விதிவிலக்காய் விடுதலைப் பட்டாளத்தை விட்டு விலகிச் சென்றான். பிரௌனிங் இதற்குமேல் கொஞ்சம் காரமாகவே பேசுகிறான்.

"இலட்சியப் பாதையில் ஏறுநடைபோடுவோம்-அவன் தலைமையில் அல்ல. கவிதைகள் நம்மை ஊக்கட்டும்— ஆனால் அவை அவன் கற்பனையில் உதயமானவை அல்ல. வந்த சிறப்பு கண்டு அவன் சிந்தை தற்புகழ் கொள்ளட்டும். நாம் நம் கடமையைச் செய்வோம். விடுதலை வீரர்களின் பட்டியலிலிருந்து விலக்கிடுங்கள் அவன் பெயரை. பாதையிலே பட்டுப்போனார், பக்கத்துப் பசுமைகண்டு பாதை மாறியோர்—இவர்கள் பட்டியலில் பொறித்திடுங்கள் அவன் பெயரை" என்று வேதனையோடு கூவுகிறான்.

எடுத்து முடிக்காத இலட்சியப் பாதை, கெடுத்து மகிழும் அதிகாரபுரி—இவைகள் அவன் இதயத்தில் தோன்றுகின்றன. மாற்றார் கூடாரத்திற்குச் சென்றவன் மீண்டும் வருவதை அவன் விரும்பவில்லை. ஆம். ஒருமுறை புளித்த பால் உபயோகமில்லை. "அப்படிச் சென்றவன் திரும்பிடினும் — இருவருக்குமிடையில் அன்றிருந்த பந்தமும் பாசமும் மீண்டும் நிலவுவது ஐயமே" என்று கூறுகிறான். எனவே சென்றவன் மீண்டும்வரத்தேவையில்லை. மாற்றார் பாசறையில் இருந்துகொண்டே நாம் கற்றுத்தந்த போர் முறையைப் பயன்படுத்தி எதிர்ப்புக் கணைகள் தூவட்டும். அவ்வாறு தூவினும் இறுதியில் வெற்றி அடைவது நாமே" என்கிறான்.

பிரௌனிங்கின் இந்தக் கவிதையைப் படிக்கும்போது, காசுக்குப் பதவிக்கும் ஆசைப்பட்டு கட்டி வளர்த்த கொள்கையை — கட்சியை காற்றிலே பறக்கவிட்டு விட்டு, காங்கிரஸ் கோட்டைக்குள் புகுந்துகொண்டிருக்கும் கலைவான்களின் துரோக காதைகள் தான்நமக்கு நினைவு வருகின்றன.

★


தீபாவளி வெளியீடு
வலம்புரி
பிக்சர்ஸ்
திருமணம்
ஒரு குடும்பப் படம்
ஜெமினி கணேசன் • சாவித்திரி • தங்கவேலு
☆ ரங்காராவ் • நாகையா • எம்.என்.ராஜம் ☆
ஈ.வி.சரோஜா • ராஜகோபால் • அசோகன் • சந்தியா
பாக்கியம் • புது நடிகர் விஸ்வநாதன் M.A. நடித்தது.
கேவா கலர் நடனங்கள்
கோபி கிருஷ்ண • குமாரி கமலா
வசனம் •
வலம்புரி சோமநாதன்
சங்கீதம் •
எஸ்.எம்.சுப்பையா நாயுடு
டைரக்ஷன் • A.பீம்சிங்
வலம்புரி பிக்சர்ஸ்
4, அபிராமபுரம் 3வது தெரு, சென்னை-18.

# வாழும் சாக்ரெட்டீஸ்

[உடுமலை வி. சதாசிவம்]

உலகத்துச் சிந்தனையாளர்களில் முதன்மை ஸ்தானம் வகிப்பவர் அறிஞர் பெட்ராண்ட்ரஸ்ஸல் என்றால் மிகையாகாது. அவரது தந்தையின் பெயர் விஸ்கவுண்ட்—ஆம்பெர்லி.

பெட்ராண்டு ஆர்தர் வில்லியம் ரஸ்ஸல் இங்கிலாந்திலுள்ள டிரிலெக் என்னுமிடத்தில் 1872-ம் வருஷத்தில் மே மாதத்தில் 18ந் தேதி பிறந்தார். அவருக்கு நான்கு வயதாவதற்கு முன்னரே அவருடைய பெற்றோர்கள் இறந்து விட்டனர்.

பெட்ராண்டு ரஸ்ஸல் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில் 1894-ம் ஆண்டில் பட்டம் பெற்றார். பிறகு கொஞ்ச காலம் பிரிட்டிஷ் மந்திரி சபையில்—பணியாற்றினார். அந்தச் சபை பாரிஸில் இருந்தது சிறிது காலம் கழித்து ஜெர்மனியில் கொஞ்ச காலம் கழித்தார். அங்குதான் அவருடைய நூல் ஒன்றுக்கு அடிப்படை உண்மைகளைக் கண்டறிந்தார். அதை பிரதிபலிக்கும் நூலின் பெயர்தான் "ஜெர்மானிய சமூக—அரசியல்"

இத்தாலி தேசத்தில் ஜியசெப்பி—பியானோ என்ற கணித நிபுணர் ஒருவர் "குறியீட்டுத் தர்க்கம்" என்ற புதுமுறை ஒன்றைக்கண்டு பிடித்திருந்தார். அம்முறையில் 1900ம் ஆண்டில் விருப்பம் கொண்டு அந்தப் புதுமுறைக் கணிதத்தில் தன் சிந்தனைமுறைமையும் செலுத்தினார். கணிதத்தில் தர்க்க சாஸ்திரமும் ஓர் பிரிவாகும் என்ற அடிப்படையை அவருடைய "கணிதத்தின் அடிப்படைகள்" என்ற நூலில் அறிவுறுத்திக் கூறியிருக்கிறார்.

அவருடைய கணிதத்தின் அடிப்படைகள் என்ற நூல் உலகத்துச் சிந்தனையாளர்கள் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது. இந்நூலுக்குப் பிறகு கணிதத்தைப்பற்றி மூன்று வால்யூம்கள் எழுதினார்.

அதற்குப்பிறகு சுமார் நாற்பது புத்தகங்கள் எழுதினார். அவர் 1946ம் ஆண்டில் 'மேற்கு நாட்டுக் கொள்கைகளின் சரித்திரம்' என்ற நூலை இயற்றினார். அதில் வேதாந்தத்தை மக்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு நன்றாக விவரித்துக் கூறியிருக்கிறார்.

இந்த நூல்களில் எல்லாம் அறிவைப் பற்றிக் கூறும்பொழுதெல்லாம் இரண்டுவிதமான அறிவுதான் உள்ளது என்று இயம்பி இருக்கிறார். அநுபவ பூர்வமாகத் தெரிந்துகொள்ளும் அறிவு முதலாவதாகும். தர்க்கரீதியாக அனுமானித்துக்கொள்ளும் அறிவு இரண்டாவதாகும். ரஸ்ஸல் வேதாந்தம், கணிதம் இவைகள் அல்லாமல் இன்னும் பல விஷயங்களைப் பற்றி எழுதியுள்ளார்.

கல்வி, சமூக அமைப்பு, ஆண் பெண் உறவு, அரசியல் இப்படி பல திறப்பட்ட விஷயங்களைபற்றி மிகத் தெளிவாகப் புத்தகங்கள் எழுதியுள்ளார். அறிஞர் ரஸ்ஸல் ஆசிரியராகப் பல கல்லூரிகளில் பணியாற்றியிருக்கிறார். சிறப்பாகக் கூறுமிடத்து கலிபோர்னியா, ஹாவார்டு, சிகாகோ, கேம்பிரிட்ஜ் முதலிய சர்வகலாசாலைகளிலும் பீப்பிங்ஸ் நேஷனல் யுனிவெர்ஸிட்டியிலும் பணியாற்றியிருக்கிறார். முதலாம் உலகயுத்தத்தில் யுத்தம் வேண்டாம் என்று பிரசாரம் செய்த குற்றத்திற்காக கேம்பிரிட்ஜ் கல்லூரியிலிருந்து நீக்கப்பட்டு ஆறு மாதம் சிறைத் தண்டனை அனுபவித்தார்.

அவர் நியூயார்க் நகரத்து சிட்டி காலேஜில் 1940-ம் ஆண்டில் ஆசிரியராகப் பதவி பெற்றார். ஆனால் அங்கேயும் அவருடைய எதிரிகள் அவரை காமாந்தகாரன் நாத்தீகன், நம்பத்தகாதவன் என்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்தி பதவிக்கு இடையூறுகள் செய்தனர்.

சிந்தனைச் சிற்பி ரஸ்ஸலின் மணவாழ்க்கையைப் பற்றி கூறுமிடத்து அவர் 1894ம் ஆண்டில் W. சுமித் என்னும் மாதை முதன் முதலாக மணந்தார். சிறிது காலத்திற்கு பிறகு சுமித் அம்மையார் விவாகரத்துக் கோரினார். அதன் பயனாக 1921ம் வருடம் 'டோராவினிபிரட்பிளாக்' என்னும் பெண்ணை மணந்தார். அவள் மூலமாக அவருக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. ஒரு வருடம் கழித்து அவருடைய காரியதரிசி 'பார்ட்ரிஸியா ஹெலன் ஸ்பென்ஸர் என்பவளை மணந்தார். இந்த விவாகத்தின் பலனாக ஓர் ஆண் மகவிற்குத் தந்தையானார் ரஸ்ஸல்.

அவருடைய அண்ணன் ஏர்ல் ரஸ்ஸல் என்பவர் 1931ம் ஆண்டு இறக்கவே அவருடைய குடும்பப் பட்டப் பெயர் ரஸ்ஸலுக்குக் கிடைத்தது என்றாலும் மிஸ்டர் ரஸ்ஸல் என்று யாவரும் அழைக்க வேண்டும் என்பதே அவருடைய அவா. அறிஞர் ரஸ்ஸலின் பொழுதுபோக்கு செஸ் விளையாட்டும் துப்பறியும் நாவல்களும் தான்.

அவர் நல்ல பேச்சாளர், நல்ல விரிவுரையாளர், சிறந்த எழுத்தாளருமாவார். அவர் 1950ம் வருடம் இலக்கியத்திற்காக 'நோபில் பரிசு' பெற்றார். அவர் சுயமாகச் சிந்தனை செய்யும் மனிதனைப் பற்றிக் கூறுகிறார்:-

"சுயமாக சிந்திப்பவன் பிறருடைய அதிகாரத்திற்கு அடிபணியமாட்டான்; அல்லது அவனுடைய உணர்ச்சிகளுக்கும் அடிமையாகமாட்டான். ஆனால் அவன் சாட்சிகளுக்கும் உண்மைகளுக்கும் ஒத்துப்போவான். அவன் கொள்கைகள் தவறு என்று மெய்ப்பித்தால் அவன் தன் எண்ணங்களை மாற்றிக் கொள்வான். அவனுக்குப் புதிய உண்மைகளை எடுத்துக் காண்பித்தால் அவனும் தேவைப்படும்போது தனது அசைக்கமுடியாத நம்பிக்கைகளைக்கூடத் தள்ளி உதறி எறிந்துவிடுவான்."

★

# ஒற்றுமையால் உயர்ந்த நாடு 4

பிற நாட்டு ராணுவ அமைப்புகளில் காணப்படுவதைப் போல் அவ்வளவு பெரிய டாங்குகளோ அல்லது பெரிய துப்பாக்கிகளோ, ஸ்விஸ் ராணுவத்திடம் கிடையாது. ஸ்விஸ் ராணுவம் வெறும் தற்காப்பிற்காகவே தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. போர்க் காலங்கள் தவிர மற்ற நேரங்களில், ஸ்விஸ் படைக்கு, ஒரு தளபதி அல்லது படைத் தலைவன் இல்லையென்பது, ஸ்விஸ் நாட்டின் ஜனநாயகப் பண்புக்குச் சான்றாகும். ஆனால் நெருக்கடியான நேரங்களில், ஸ்விஸ் பெடரல் சட்டசபை, ஒரு தளபதியை நியமிக்கும். ஸ்விஸ் சேனைக்கு ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் மட்டும் என்றும் சட்டசபைக்கு உண்டு. இன்றுவரை, ஸ்விஸ் ராணுவ முறை, மிக்க திறமை வாய்ந்த தொன்றாக மிளிர்வதன் காரணம், அது திறமை வாய்ந்த படைவீரர்களைக் கொண்டிருப்பதேயாகும்.

1934-ம் ஆண்டில் மட்டும், இராணுவச் செலவிற்கென, 92,200,000 பிராங்குகள் ஒதுக்கப்பட்டன என்று மதிப்பிடப்படுகிறது. இந்தத் தொகை, ஸ்விஸ் நாட்டு மொத்த பட்ஜட் தொகையில், 21 சத விகிதமாகும் எனக் கணக்கிட்டுள்ளனர். ஸ்விஸ் ராணுவ முறையின் சாதனைகளைக் கண்ட ஜீன் ஜாரிஸ் முதல் உலகப் போர் நிகழ்வதற்குச் சின்னாட்களுக்கு முன், பிரான்ஸ் நாட்டில் அதே முறையைப் புகுத்த வேண்டுவதின் அவசியத்தை வலியுறுத்தினார். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும், இந்த இராணுவ முறையைப் புகுத்தவேண்டுமென்று பலர் கூறினார்கள். 1932ம் ஆண்டில் நடந்த ஆயுதப் பரிகரிப்பு மாநாட்டிலும், ஸ்விஸ் ராணுவத்தின் அடிப்படையில், ஐரோப்பிய ராணுவத்தைத் திருத்தியமைப்பதைப்பற்றிக் கலந்தாலோசிக்கப்பட்டது.

ஆனால் சிலவாண்டுகளுக்குமுன் ஸ்விஸ்ராணுவ முறையைப்பற்றிச் சிலர் குறைகூறவும் முன்வந்தனர். கட்டாய இராணுவச் சேவைக் கொள்கையை அவர்கள் கண்டித்து, எதிர்த்தனர். இராணுவ அதிகாரிகளின் வகுப்பு, பெரும்பாலும் செல்வந்தர்களைக் கொண்டிருந்ததால், தொழிலாளரினத்தை நசுக்குவதற்கு, இராணுவத்தை, அவர்கள் ஒரு கருவியாகப் பயன்படுத்தக்கூடும் என்று வேறு சிலர் அஞ்சினர். 1932-ம் ஆண்டில் ஜெனிவா நகரத்தில், ஸ்விஸ் படைக்கும் சோஷியலிஸ்டுகளுக்கும் இடையில் நடந்த கைகலப்பை, இவர்கள் தங்கள் அச்சத்திற்கு உதாரணமாக எடுத்துக்காட்டினார்கள்.

போர் முறைகளில், நாளுக்கு நாள் மாற்றங்கள் வளர்ந்து வரும் இவ்விருபதாம் நூற்றாண்டில்,

கோ. கோதண்டராமன்

ஸ்விஸ் ராணுவத்தின் திறமை அவ்வளவாகப் பயன்படாது என்பது யாவரும் அறிந்ததொன்றே. தன்னைச் சூழ்ந்துள்ள நாடுகளின் தரைப்படையின் ஆக்ரமிப்பை வேண்டுமானால் ஸ்விஸ் படை தடுத்து நிறுத்தலாம். ஆனால் எதிரிகளின் ஆகாய விமானப் படைகளின் ஆக்ரமிப்பையும், பிரம்மாண்டமான டாங்குகளையும், நச்சுவாயுவையும், ஸ்விஸ் படை யாங்ஙனம் சமாளிக்க முடியும்?

ஜெர்மனியில் உருவாகிக் கொண்டு வந்த இட்லரிசமும், ஜெனிவா நகரத்தில் நடந்த ஆயுதப் பரிகரிப்பு மாநாட்டின் தோல்வியும் சேர்ந்து, ஸ்விஸ் நாட்டு மக்களிடை அமைதிக்குப் பங்கம் விளையுமோ என்ற அச்சத்தை, ஊட்டியது. இந்த நெருக்கடியை மேலும் சமாளிக்க, 1933-ம் ஆண்டு பெடரல் சட்டசபை இராணுவப் பயிற்சிகளை அதிகப்படுத்தியதோடல்லாமல், இராணுவத்தின் விமானப் படையையும, தரைப்படையையும் வலுப்படுத்த எண்பது மில்லியன் பிராங்குகளை ஒதுக்கியது. தற்காப்பற்ற, ரைன் நதிப் பாலத்தின் வழியாக, ஜெர்மன் படையெடுப்பை, ஸ்விஸ் நாடு எதிர்பார்த்ததால் (காரணம் பிரான்ஸ் நாட்டு லயான்சுக்குச் செல்லும் வழி அது). ஸ்விஸ் பாராளு மன்றம், ரைன் நதி தீரத்தை வலுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 1934-ம் ஆண்டில் ஸ்விஸ் ராணுவத்தில் கம்யூனிஸ்டு பிரசாரத்தை ஒடுக்கவேண்டுமென்று கோரிய மனுவொன்று நாடு முழுவதும் சுற்றிவந்தது. சில சோஷியலிஸ்டுகள் பாசிஸத்தின் எழுச்சியை இராணுவத்தின் மூலமே ஒடுக்க வேண்டும் என்று கருதினார்கள்.

### அரசாங்க அமைப்பு

ஸ்விஸ் பெடரல் சர்க்காரின் அதிகாரங்கள், அமெரிக்க அர

சாங்கத்தின் அதிகாரங்களைக் காட்டிலும் விரிந்தவையாகும். இவ்வாறு பெடரல் சர்க்கார், தனிச் சட்டங்கள், கல்வி, வாணிபம் ஆகிய துறைகளை யொட்டிய விவகாரங்களைக் காண்டன்களுக்குள்ளாகவோ அல்லது காண்டன்களுக்கிடையிலோ, பராமரிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. பெடரல் சர்க்காரின் அதிகாரங்களை, அரசியலமைக்குட்பட்ட,ஒரு உரிமை சாசனத்தின் மூலமாகவோ, அல்லது சட்டங்களைச் செல்லத்தக்கனவல்ல என்று முடிவு கூறும் சுப்ரீம் கோர்ட்டாலோ சுருக்கவோ, குறைக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. எனினும், மக்களின் சுதந்திர உரிமை மதிக்கப்பட்டு, பெடரல் சர்க்காருக்கும் காண்டன்களுக்குமிடையே உறவு நன்கு வளர்க்கப்பட்டு வருகிறது. ஸ்விஸ் நாட்டில் (1) பெடரல் சட்டசபைக்கும், நிர்வாகிகளுக்கும், இடையில் நின்று நிலவும் நல்லுறவும், (2) பெடரல் சட்டசபையில் காண்டன்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் பிரதிநிதித்துவமும், (3) நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களை உருவாக்குவதற்குமுன், மக்கள் தங்கள் எண்ணங்களை வெளியிடவும், அந்த எண்ணங்களில் சீரியவை என்று கருதுவனவற்றை சர்க்கார் ஏற்றுக்கொள்ளவும், அங்குக் காணப்படும் வாய்ப்பும் வசதியும், அந்நாட்டில் நேரடியான மக்களாட்சி நிலவிவருவதற்குத் தக்க சான்றுகளாகும்.

முன்னர் குறிப்பிட்டதைப்போல் பெடரல் சட்டசபை இரு கூறுகளைக் கொண்டதாகும். முதலாவது ஸ்டேட் கவுன்சில் அல்லது மேல்சபை. இது 44 அங்கத்தினர்களைக் கொண்டதாகும். இந்த 44 அங்கத்தினர்கள் ஒரு காண்டனுக்கு இரண்டு பேர்கள் என்ற விகிதத்தில் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இந்தப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பும், முறையும் காண்டன்களைச் சார்ந்ததாகும். இந்த உறுப்பினர்களின் ஆயுட் காலத்தை நிர்ணயிக்கும் பொறுப்பும் காண்டன்களையே சாரும். இந்தப் பிரதிநிதிகளுக்குச் சம்பளங் கொடுப்பதும் காண்டன்களேயாகும். ஆனால் அவர்கள் பெடரல் கவுன்சிலில் ஓட்டளிக்கும் போது, இவ்வாறுதான் ஓட்டு அளிக்கவேண்டுமென்று ஆணையிடும் அதிகாரம் காண்டன்களுக்கில்லை.

பெடரல் சட்டசபையின் மற்றொரு கூறுதான் கீழ்ச்சபை அல்லது தேசியக் கவுன்சில். 1930-ம் ஆண்டிற்கு முன்பு, இச்சபை இருபதாயிரம் மக்கள் கொண்ட தொகுதிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது. ஆனால், 1930-ம் ஆண்டில், இந்தச் சபையின் ஆயுட்காலம் மூன்றிலிருந்து நான்காண்டுகளாகவும், ஒரு தொகுதி மக்களின் எண்ணிக்கை, இருபதாயிரத்தில் இருந்து இருபத்திரண்டாயிரமாகவும் நீட்டப்பட்டது. இதன் விளைவாக 1920-ம் ஆண்டில் இச்சபை உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 198-ல் இருந்து 187 ஆகக் குறைக்கப்பட்டது. இந்த 187 அங்கத்தினர்களின் விவரம் பின்வருமாறு:-

| காண்டனின் பெயர் | | பிரதிநிதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஜூரிச் | ... | 28 |
| பெர்ன் | ... | 31 |
| லூசர்னி | ... | 9 |
| யூரி | ... | 1 |
| ஸ்க்விஸ் | ... | 3 |
| அன்டர் வால்ட் | ... | 2 |
| கிளாரிஸ் | ... | 2 |
| சவுக் | ... | 2 |
| பிரேபர்க் | ... | 7 |
| சோலியூர் | ... | 7 |
| பேல் | ... | 11 |
| ஸ்காப் அவுஸ் | ... | 2 |
| அப்பன்ஸெல் | ... | 3 |
| செயிண்ட்கால் | ... | 13 |
| கிரிசன்ஸ் | ... | 6 |
| அர்கோவி | ... | 12 |
| தர்கோவி | ... | 6 |
| டெசின் | ... | 7 |
| வாட் | ... | 15 |
| வாலிஸ் | ... | 6 |
| நுவன்பர்க் | ... | 6 |
| கென்ப் | ... | 8 |
| | | 187 |

பொதுவாக, ஸ்விஸ் பாராளுமன்றத்தின் இருசபைகளும் அதிகாரத்தில் சமமானவை என்றாலும் சில துறைகளில் தேசியக் கவுன்சில் (கீழ்ச்சபை) அதிக அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது. நாட்டையாளும் பெடரல் கவுன்சில் அல்லது மந்திரி சபையைத் தேர்ந்தெடுக்கும்போதும், பெடரல் கோர்ட்டையும் வேறு சில முக்கிய அதிகாரிகளை நியமிக்கும்போதும், மன்னிப்பு அளிக்கும் அதிகாரத்தைச் செலுத்தும்போதும், பெடரல் சர்க்காரின் அதிகாரிகளிடை கருத்து வேற்றுமைகள் எழும் போதும், இருசபைகளும் ஒன்றாகக் கூடி ஆலோசிக்கும். அமைச்சர்கள் (அல்லது பெடரல் கவுன்சில்) பாராளுமன்றத்தின் எச் சபையையும் கலைக்கமுடியாது. தேசியக் கவுன்சில் உறுப்பினர்களில் நான்கில் ஒரு பகுதியினர் விரும்பினாலும், பெடரல் கவுன்சில் விரும்பினாலும், அல்லது ஐந்து காண்டன்கள் விரும்பினாலும் பாராளுமன்றத்தைக் கூட்டலாம். இவ்வாறு பெடரல் சட்டசபை என்றழைக்கப்படும் ஸ்விஸ் பாராளுமன்றம், அமைப்பு முறையில் பல்லாற்றானும் சிறந்து விளங்குகிறதென்றாலும் வேறு நாட்டுப் பாராளுமன்றங்களின் அதிகாரங்களை விடக் குறைந்த அதிகாரங்களையே பெற்றிருக்கிறது. இதன் காரணம் என்னவென்றால், கட்சிகளின் வெற்றி தோல்விகளினால் பாதிக்கப்படாத, நிரந்தர நிர்வாக இயந்திரம் ஸ்விஸ் நாட்டில் இயங்குவதுதான். இதனால், பெடரல் சட்டசபை நிர்வாக அனுபவமும், ஆர்வமும் நிரம்பப்பெறாததொன்றாய்க் காணப்படுகிறது. பெடரல் அரசாங்கத்தில் சிறிதுகாலம் செய்த சேவையின் மூலம், நிர்வாக அனுபவம் பெற்றவர்கள் பெடரல் சட்டசபையில் உறுப்பினர்களாக இல்லாததால், அதனைச் சர்வ சக்தி வாய்ந்த சபை என்று கூறுவதை விட, ஆலோசனைக் குழுவெனக் குறிப்பிடுதலே சாலப் பொருத்தமுடைத்தாம். அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பெடரல் சட்டசபை திருத்துவதோ நிராகரிப்பதோ மிகவும் அரிதாகும். பெடரல் சட்டசபை கட்சிக்கூடாரங்களுக்கப்பால் வாக்காளர்களைக் காட்டிலும், நிர்வாகத்தோடு ஒத்துழைப்பது, அதன் பெருமதிப்பைக் காட்டுகிறது. முக்கிய விவகாரங்களில் மக்களின் கருத்துக்களைப் பொதுவாக்கெடுப்பின் மூலம் நேரடியாகக் கண்டறியும் முறை ஸ்விஸ் நாட்டில் வெற்றியளிப்பதன் காரணம், பாராளுமன்றம் நிர்வாகத்தோடு நன்கு ஒத்துழைப்பதுதான். ★

# "நீத்தார் பெருமை"

[காவியுடையினரின் கயமைத் தனத்தை விளக்கிடும் இந்தக் கட்டுரை "இந்துஸ்தான் டைம்ஸ்" இதழில் வந்ததன் மொழிபெயர்ப்பு. கட்டுரை ஆசிரியர் மீராபென் என்பவர்.]

சாதுக்கள் சமூகம் தன்னைத்தானே திருத்திக்கொள்ளும் — அதற்கான பணியில் நிச்சயம் அது ஈடுபடும்— என்று கடந்த பத்து ஆண்டுகளாக எதிர்பார்த்து நான் ஏமாந்தேன்.

ரிஷிகேசத்தின் அருகே — பஷுலோக் என்னும் பகுதியில் — 1947 லிருந்து 1950 வரை தங்கியிருந்தேன். அருகாமையிலிருந்த காரணத்தால் சாதுக்களின் நடத்தையையும்-அதில் காணப்பட்ட கயமைத்தனத்தையும் — நேரடியாகவே கண்டு வெறுப்படைந்தேன். எனவே, மேலும் பல உண்மைகளைக் கண்டறியவேண்டும் என்ற ஆவல் எனக்கு ஏற்பட்டது. அதன் பயனாக, அவர்கள் ஆபாச நடத்தையினர்— அருவருக்கத் தகுந்தோர்—சூதாடிகள் —காமுகர்கள் — கொலைகள் பல புரிந்தோர்—என்ற உண்மைகள் வெளிப்பட்டன. துறவிகளின் இருப்பிடம் எனக் கருதப்பட்ட ரிஷிகேசம் உண்மையிலேயே தன்னிகரற்ற கயவர்கள் நிறைந்த இடமாகத்தான் இன்று இருக்கிறது.

நுண்ணறிவும், நற்பண்பும் பெற்றுள்ளவர்கள் எனக் கருதப்படும் சிற்சில துறவிகளும் இதுபோன்ற நிலையை—'புனித' ஸ்தலங்கள் அனைத்திலும் பரவியுள்ள பண்பின்மையை —மாற்றியமைக்க ஏன் முன்வரவில்லை என்று எனக்குப் புரியவில்லை.

சிறிது நாட்களுக்கு முன் மடாதிபதிகள் பலரிடம் இதுபற்றி விவாதித்தேன். அவர்களும் சீர்திருத்தம் ஏற்படவேண்டிய அவசியத்தையும், அவசரமான சூழ்நிலையையும் உணருகின்றனர். நேர்மையும் நற்பண்பும் மிக்க சாதுக்களை மட்டுமே மடங்களில் சேர்த்துக்கொள்வதற்கான திட்டங்களை அவர்கள் அப்போது வகுத்தனர். வனங்களில் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படவேண்டும் —சாதுக்களாக ஆக விரும்புவோர் அனைவரும் காடுகளில் கொஞ்ச நாட்களாவது வாழவேண்டும்—என்றும் ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. மடங்களில் சேர்த்துவைக்கப்பட்டிருக்கும் மாபெரும் செல்வத்தைப் பயனுள்ள முறைகளில் செலவழிப்பது பற்றியும் அவர்கள் ஆலோசனைகள் நடத்தினர்.

இதுபோன்ற திட்டங்கள் தீட்டப்பட்டு ஏறக்குறைய ஏழு ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும் பலன்? ரிஷிகேசமும், அதுபோன்ற 'புனித' ஸ்தலங்களும் என்றும் போலவே இழிநிலையில்தான் இருக்கின்றன—திருத்தியமைப்பதற்கான திட்டம் எதுவும் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவில்லை.

இன்னுமொரு வேடிக்கை நிகழ்ந்திருக்கிறது. இந்த சாதுக்கள் அனைவரும் "சீர்திருத்தக்காரர்"களாக சமுதாயத்தில் புகுந்திருக்கின்றனர்! முதலில் தங்களைத் திருத்திக்கொண்டல்லவா பிறரைத் திருத்தும் பணியில் இவர்கள் ஈடுபட்டிருக்கவேண்டும்?

உண்மையான துறவிகள் இந்த நாட்டின் முன்னேற்றத்திற்கான பணியில் உண்மையிலேயே பெரும்பங்கு பெறமுடியும். என்றாலும், காவியுடையில் கயமைத்தனமும் ஏமாற்று வித்தைகளும் செய்பவர்கள்தானே மிகப் பெரும்பாலோர்!

அரசாங்கத்தின் உதவியைப் பெற்று சமுதாயத் தொண்டினில் ஈடுபட்டிருக்கும் சாதுக்களும் சிலருண்டு. அவர்கள் செய்கை மாபெருந் தவறு! பெறப்பட்ட அரசாங்க உதவி, சாதுக்கள் சமுதாயத்தினைச் சீர்திருத்துவதற்கல்லவா பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும்? தாங்களாகவே அந்தக் காரியத்தைச் சாதித்துக்கொள்ள இயலாத நிலையில் இந்த முறையிலாவது முயன்று பார்த்திருக்க வேண்டுமல்லவா?

"புனித" ஸ்தலங்களில் நிகழும் பொல்லாங்குகள் களையப்படாமல்— "புனிதர்"களின் போக்கு திருத்தப்படாமல் — சாதுக்களை சமுதாயப் பணியில் ஈடுபடுத்துவதும், அவர்களுக்கு ஊக்கமளிப்பதும்—அரசாங்கம் செய்துவரும் மகத்தான தவறுகள் என நான் கருதுகிறேன்.

அண்மையில்கூட ரிஷிகேசத்திற்குச் சென்றேன். கயவர்களின் குகையாகவே அது இன்னமும் இருப்பதைக் கண்ட எனக்கு, காவியுடையைக் கண்டாலே ஆத்திரமும் அருவருப்பும் தோன்றுகிறது. காவி நிறமென்றாலே எனக்கு மிகவும் பிடிக்கும்; என்றாலும் இவையனைத்தையும் கண்ட நான், அந்த நிறமுள்ள ஆடை எதையும் அணியக்கூடாது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன்.

காவி கட்டியவன் என்றாலே காண்பவர் அனைவர் கருத்திலும்—அவன் எத்தனோ — அல்லது இன்னமும் மோசமானவனோ — என்று ஐயமும் அச்சமும் தோன்றுமளவுக்கு நிலைமை மோசமாகியிருக்கிறது, கிராமத்து மக்கள்—சாதுக்களென்றாலே அவர்களது பாதம் பணிந்து பரவசமடையும் பழக்கத்தினர்—அவர்கள் கருத்தில்கூட ஐயப்பாடுகள் துளிர்க்கின்றன. இந்த நிலை மேலும் வளர்ந்து வந்தால், என்றுமே புதுப்பிக்கமுடியாத அளவு சிதைவினை இந்துமதம் அடைந்தே தீரும்!


**HOMELAND**

ஏஜண்டு இல்லாத ஊர்களுக்கு குறைந்த அளவு ரூ. 25 முன் பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

கூடுதலான பிரதிகள் வேண்டும் ஏஜண்டுத் தோழர்கள் பிரதி 1-க்கு ரூ. 1 வீதம் முன் பணம் செலுத்தி பெற்றுக் கொள்ளவும். முன் பணம் அனுப்பாது கூடுதலான பிரதிகள், அனுப்பப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பொறுப்பாளர்,
HOMELAND.